

# அன்பு

## வைரவிழா மலர்

தொகுப்பாசிரியர்

**கதிரவன் த.இன்பராசா**

வெளியீடு: கதிரவன் பட்டிமன்றப் பேரவை, மட்டக்களப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அன்புக்கு அறுபது"

கதிரவன் பட்டிமன்றப் பேரவை ஆலோசகர்

## கவிஞர் அ.அன்பழகன் குரூஸ்

அவர்களின்

# வைரவிழா மலர்

# அன்பு

வெளியீடு

கதிரவன் பட்டிமன்றப் பேரவை

மட்டக்களப்பு

**01.07.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கு அறுபது வைரவிழாச்சபை
# கதிரவன் பட்டிமன்றப் பேரவை

| | | |
|---|---|---|
| **ஆலோசகர்** | : | திரு.அ.குலேந்திரராசா |
| **தலைவர்** | : | கதிரவன் த.இன்பராசா |
| **செயலாளர்** | : | கவிஞர் அழகு தனு |
| **பொருளாளர்** | : | மட்டுநகர் சிவ.வரதகரன் |
| **இணைப்பாளர்** | : | பாலமீன்மடு இரா.கலைவேந்தன் |
| **உபதலைவர்** | : | சோலையூரான் ஆ.தனுஸ்கரன் |
| **உப செயலாளர்** | : | திரு.சி.சுதேஸ்வரன் |

## செயற்குழு அங்கத்தவர்கள்

திரு.ச.பா.மதன்

புதுவையூர் பு.தியாகதாஸ்

கவிஞர் தங்க யுவன்

திருமதி நர்மதா அகளங்கன்

திரு.த.பூபாலசிங்கம்

கவிஞர் ரவிகிருஷ்ணா

கவிமகள் ஜெயவதி

திரு.பு.யுவதாஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## "அன்பு" மலர்க்குழு

**தொகுப்பாசிரியர்**

கதிரவன்.த.இன்பராசா

**துணையாசிரியர்**

கவிஞர்.அழகு தனு

**நூல் வடிவமைப்பு**

ச.பா.மதன்

**உதவி**

மட்டுநகர் சிவ.வரதகரன்

பாலமீன்மடு இரா.கலைவேந்தன்

சோலையூரான் ஆ.தனுஸ்கரன்

திரு.சி.சுதேஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்புக்கு அறுபது

அன்பழகன் ஐயா இதை விரும்பவில்லை ஆனால் கதிரவன் விடுவதாய் இல்லை கதிரவனோடு பயணித்த வர்களை, பயணிக்கின்றவர்களை எச்சந்தர்ப் பத்திலும் கதிரவன் மறந்ததாக சரித்திரமில்லை. கால நேரம் பார்த்து அவர்களை கௌரவப்படுத்துவதிலும், ஊக்கப் படுத் துவதிலும் கதிரவன் பின் நின்றதில்லை.

அந்த வகையில் கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் ஆலோசகர் அன்பழகன் குரூஸ் அவர்களின் அறுபதா வது வைர விழாவினைக் கொண்டாட வேண்டும் என்பதில் கதிரவன் பட்டிமன்ற பேரவையினர் குறியாக இருந்தார்கள்.

கதிரவன் பட்டிமன்றப் பேரவை அன்புக்கு அறுபது வைர விழா செயற்குழுவானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பு எனும் பெயரில் கவிஞர் அ.அன்பழகன் குரூஸ் அவர்களின் ஆளுமைகளை தாங்கியதாக நூல் ஒன்றினையும் வெளியிட வேண்டும் என்று முடிவெடுத்தோம்.

கதிரவன் ஏதாவது நற்பணி ஒன்றை செயற்படுத்த முடிவெடுத்தால் கதிரவன் உறவுகள் தன்னலம் பாராது முழுமையாக செயற்படுவார்கள். அந்த வகையில் அன்புக்கு அறுபது வைர விழா நிகழ்வும், "அன்பு" மலர் வெளியீடும் இறையருளால் கைகூடியுள்ளது.

இந்த வெற்றிக்கு வழி வகுத்த கதிரவன் உறவுகளை இதயத்தில் இருத்திக் கொள்வதோடு, கதிரவன் பட்டி மன்றப் பேரவையின் அன்புக்கு அறுபது வைரவிழா செயற்குழுவுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் "அன்பு" எனும் அழகான நூலினை வடிவ மைத்த ச.பா.மதன் அவர்களுக்கும், நூலிற்கான அனுசரணை வழங்கிய புதுக்குடியிருப்பு காந்தள் அச்சகத்தாருக்கும், அன்புக்கு தங்கள் ஆக்கங்களை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் கதிரவன் சார்பாக நன்றிகளைக் கூறிக்கொள்கின்றேன்.

**கதிரவன் த.இன்பராசா**

**தொகுப்பாசிரியர்**

**அன்பு வைரவிழா மலர்**

**தலைவர் - கதிரவன் பட்டிமன்றப் பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பழகன் குரூஸ் எனும் அறுபது வயது இளைஞன்

அன்பழகன் குரூஸ் அவர்களை உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான பயிற்சி நெறி ஒன்றில் சந்தித்தேன். ஒருவருடைய அறிவு முதிர்ச்சியினையும், மன இயல்புகளையும் அவரின் நடையுடை பாவ னையில் இருந்து புரிந்து கொள்ளலாம் எனக் கூறு வார்கள். இது அன்பழகன் குரூஸ் அவர்களுக்கு 100% பொருந்தும். அவர் ஒரு விடயத்தை பல்வேறு கோணங்களில் அணுகும் விதமும் அவற்றை மற்றவர் களுக்கு பக்குவமாக எடுத்துக் கூறும் விதமும் அவரின் தனித்துவத்தை பறைசாற்றி நிற்பன.

நான் மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணை யாளராக கடமை ஆற்றிய ஆறு மாதங்களுக்குள் அவருடன் சேவையாற்றக் கிடைத்தமையை பொற் காலங்களாகவே கருதுகின்றேன். இன்னும் ஞாபகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கின்றது அன்றைய பதவி ஏற்பில் நான் அன்றைய அலுவலகத்தில் பேசுகின்ற போது அன்பழகன் குரூஸ் அவர்களின்

**அதிகார வெறி பிடித்த ஓநாய்**
**கொன்று குவித்து**
**கடைவாயால் ரத்தம் வடிய**
**தன் நாவை சுழற்றிய போது**
**என்னால் அழவும் முடியவில்லை**
**சிரிக்கவும் முடியவில்லை**

**நாளை என்னை நோக்கி**
**ஒரு துப்பாக்கி திரும்பாது**
**என்பதற்கு என்ன உத்தரவாதம் ...?**

எனும் கவிவரிகளை ஞாபகப்படுத்திக் கொண்டே பேசினேன். உள்ளூராட்சி மன்றத்தின் சேவைகளை, மட்டக்களப்பு மாவட்ட சன சமூக நிலையங்களை வலுப்படுத்த வேண்டும் என்ற பெரும் அவா எனக்கும் அவருக்குமான பொதுவான ஒன்றாக இருந்தது. எங்கள் எண்ணத்தில் இது தொடர்பான மிகப்பெரிய திட்டங்களும் இருந்தன. அவர் ஓய்வு பெற்றுச் சென்றாலும் தொடர்ந்து திணைக்களத்திற்காக இயங்குவேன் எனத் திரும்பத்திரும்பக் கூறுவார்.

அன்பழகன் குரூஸ் ஒரு மிகச் சிறந்த அரச உத்தியோகத்தர். உலவளத் துணை ஆர்வமூட்டும் பேச்சாளர், இலக்கிய ஆர்வலர், கவிஞர், பட்டிமன்ற பேச்சாளர், மிகச் சிறந்த ஆலோசகர் என பல்வேறுபட்ட துறைகளில் துடிப்போடு இயங்குபவர் அதனால் தான் அவரை 60 வயது இளைஞன் என்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் இவ்வருட ஆரம்பத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளராக ஆறு மாதங்கள் கடமையாற்றியபோதும் அன்பழகனை ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக அறிவேன்.

அவர் உள்ளூராட்சியில் மிகுந்த ஈடுபாட்டுடன் பணியாற்றியவர் என்பதனை யாவரும் அறிவர். இதனால் அவருக்கு வாய்ப்புகள் அதிகமாக கிடைத்தது. தனது கடமைகளை சரியாகச் செய்ய வேண்டும் எனும் எண்ணத்துடன் செயற்படுவது இவரது சிறப்பாகும்.

நானும் ஒரு கலை இலக்கிய ஆர்வம் கொண்டவன் என்பதனால் அன்பழகனின் கலை இலக்கிய ஆக்க இலக்கியச் செயற்பாடுகளை நான் அறிவேன்.

கதிரவன் கலைக் கழகம் சுமார் ஐம்பது ஆண்டுகளாக மட்டக்களப்பில் முதன்மையான கலை இலக்கிய அமைப்பாக இயங்கி வருகின்ற அமைப்பாகும், அவர் களது செயற்பாடுகளைக் கண்டு நான் மகிழ்ச்சியுடன் அவர்களுக்கு எனது பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

அன்பழகனையும் நான் வாழ்த்திப் பாராட்டுகின்றேன்.

**நா.பார்த்திபன் (SLAS)**

**பணிப்பாளர், பண்பாட்டலுவல்கள் திணைக்களம்.**

**கிழக்கு மாகாணம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பின் வழி

அன்பு ஐயா என்று நாம் அனைவரும் அன்போடும், நட்போடும், உரிமையோடும் அழைத்து உறவாடும் கதிரவன் பட்டிமன்ற பேரவையின் ஆலோசகர் அன்பழகன் ஐயா அவர்கள் இன்று தனது 60ஆவது வயதை அடைகின்றார்.

இவர் கதிரவன் பட்டிமன்ற பேரவையின் மூத்த பேச்சாளர் என்பதுடன், கதிரவனின் செயற்பாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாவற்றிற்கும் முதனிலை ஆலோசகராகத் தொடர்ந்து இருபது ஆண்டுகள் செயற்பட்டுவருகிறார். கதிரவனின் தாபகர் கலாபூஷணம் சி.தங்கராசா அவர்களுக்கு அடுத்ததாக அறுபதாவது அகவையை அடையும் அடுத்தவர் எனும் பட்டியலில் இவர் உள்வாங்கப்படுவதனால் இவரை வாழ்த்தி நன்றி கூறிப் பெருமையடைகின்றோம்.

கதிரவனோடு சேர்ந்து செயற்படும் அனைவருக்கும் இது ஒரு முன்மாதிரியாக அமைவதுடன், கதிரவன் பட்டிமன்றப் பேரவை மற்றும் கதிரவன் உறவுகளோடும் நண்பர்களோடும் இணைந்து அன்பழகன் அவர்களின் இந்த 60ஆவது பிறந்த தினத்தை அனுசரிப்பதும், சிறப்பிப்பதும் எமக்கு மகிழ்ச்சிதருகின்றது.

**அவருக்கு எமது உளம் நிறைந்த பிறந்தநாள் நல்வாழ்த்துக்கள். வாழ்க வளத்துடன்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அமைதியாக, அதேவேளை ஆழமான தமிழ்க் கலை இலக்கியச் செயற்பாட்டாளராக இவர் தனது சிறு வயதுமுதல் இயங்கி வருவதனை நாம் நன்கறிவோம். எம்மோடு இணைந்து இயங்குபவர்களுக்கு தக்க தருணத்தில் தக்க கௌரவம் வழங்குவதில் நாங்கள் பின்னிற்பதில்லை என்பதனை இந்த நிகழ்வு எடுத்துக் காட்டுகின்றது. இந்த வரிசையில் இவர் முதலில் எமது சிறப்பினைப் பெறுகின்றார்.

**சுய விபரம்.**

| | | |
|---|---|---|
| **முழுப்பெயர்** | : | **ஹொபின் அன்பழகன் குரூஸ்** |
| **தந்தை** | : | **"குட்டிக்கதை குரூஸ்" அற்புதராஜா குரூஸ்** |
| **தாய்** | : | **திரேசா குரூஸ்** |
| **பிறந்தது** | : | **01.07.1965** |
| **வதிவிடம்** | : | **45A, பிரதான வீதி, சின்ன ஊறணி, மட்டக்களப்பு** |
| **மனைவி** | : | **ரஞ்சினி அன்பழகன் குரூஸ் (சிரேஷ்ட குடும்பநல உத்தியோகத்தர்)** |
| **மகன்** | : | **அபிஷேக் குரூஸ்** |

**பாடசாலைக் கல்வி**

☑ முதலாம் வகுப்பு தொடக்கம் நான்காம் வகுப்பு வரை (1971-1974) - மட்டக்களப்பு அமிர்தகளி சித்தி விநாயகர் வித்தியாலயம்;

☑ ஐந்தாம் வகுப்பு தொடக்கம் ஏழாம் வகுப்பு வரை (1975-1977)- வாழைச்சேனை கருவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ☑ எட்டாம் வகுப்பு தொடக்கம் உயர்தரம் வரை - மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி.

**உயர்கல்வி**

- ☑ **கலைமாணி**-பேராதனைப் பல்கலைக் கழகம்
- ☑ **பட்டப்பின் கல்வி டிப்ளோமா** - இலங்கை திறந்த பல்கலைக் கழகம்
- ☑ **முதுகலைமாணி (சமூகவியல்)** - மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்
- ☑ **சட்டமாணி** - இலங்கை திறந்த பல்கலைக் கழகம்
- ☑ **உள்ளூராட்சி டிப்ளோமா** - இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்
- ☑ **ஆய்வு முறைகள் டிப்ளோமா** - இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகம்
- ☑ **பயிற்சி முறையியல் டிப்ளோமா** - இலங்கை நிர்வாக அபிவிருத்தி நிறுவகம்.

**தொழில்**

- ☑ பாதுகாப்பு உத்தியோகஸ்தர் - தேசிய கடதாசி கூட்டத்தாபனம், வாழைச்சேனை.
- ☑ எழுது வினைஞர் - தேசிய கடதாசி கம்பனி. வாழைச்சேனை.
- ☑ பட்டதாரி ஆசிரியர் - மண்டூர் ராமகிருஷ்ண வித்தியாலயம் மற்றும் மாவடிவேம்பு விக்னேஸ்வரா வித்தியாலயம்.
- ☑ சனசமூக அபிவிருத்தி உத்தியோகஸ்தர் - உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☑ தொழில்சார் பயிற்சி வளவாளர் - கடந்த 20 ஆண்டுகளாக இலங்கையில் பல்வேறுபட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்காக பயிற்சியாளராகவும், ஆலோசகராகவும் பணி யாற்றி வருகின்றார். சமூகம் சார்ந்த பயிற்சிகளை வழங்குவதில் இவர் முன்னிலை பயிற்சியாளராகச் செயற்படுகின்றார்.

## கலை இலக்கியம் மற்றும் ஆக்கத்திறன் செயற்பாடுகள்.

### கவிதை

1977 ஆம் ஆண்டுமுதல் தனது சிறு வயதிலிருந்து கவிதை எழுதத் தொடங்கியவர். தனது தந்தையாரின் கவிதைகாளால் கவரப்பட்டதனால் தொடர்ந்து கவிதை எழுதி வருகின்றார். இன்றுவரை மரபுக் கவிதை, புதுக்கவிதை மற்றும் ஹைக்கூ கவிதைகளை எழுதுவதில் இவர் தன் திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார். பல கவியரங்குகளின் பங்குபற்றியுள்ளார்.

1985 ஆம் ஆண்டு தொடக்கம் 1995 ஆம் ஆண்டு வரை இலங்கை வானொலியின் "ஒலிமஞ்சரி" நிகழ்ச்சியில் தனித்துவமான இடத்தைப் பிடித்து அந்நாட்களின் தேசிய ரீதியாக அறியப்பட்டவர் சுமார் 150க்கு மேற்பட்ட கவிதைகளை வாரம் தோறும் எழுதி ஒலிபரப்பியுள்ளார்.

### சிறுகதை

1983ம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு வாசகர் வட்டத்தின் இளம் உறுப்பினராக இருந்து தன்னைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




செம்மைப்படுத்திக் கொண்ட இவர், காலஞ்சென்ற பேராசிரியர் செ.யோகராஜா அவர்களின் வழிகாட்டலில் முதலாவது சிறுகதையை எழுதி அதனை வீரகேசரி பத்திரிகையில் பிரசுரிக்குப் பெற்றவர். இன்றுவரை 50க்கும் மேற்பட்ட சிறுகதைகளைப் பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளியிட்டுள்ளார். "தமிழ் அன்பு" எனும் புனைபெயரில் இவர் சில சிறுகதைகளை எழுதி இருக்கின்றார்.

**நாடகப் பிரதி ஆக்கம்**

தான் வாழும் கிராமத்தில் 1987 ஆம் ஆண்டுகளில் தமிழ் சங்கம் என்கின்ற ஒன்றை நிறுவி அதனூடாக பல நாடகங்களைப் பிரதியாக்கம் செய்து, இயக்கி மேடையேற்றியுள்ளார். அந் நாட்களின் பல நாடகக் கலைஞர்கள் உருவாகுவதற்கு இவர் காரணமாக இருந்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பாக பின்வரும் நாடகங்கள் இவரால் எழுதப் பெற்றவையாகும்,

- ☑ ஜீவகாருண்யம்
- ☑ கங்கையின் மைந்தன்
- ☑ மருது பாண்டியர்
- ☑ எமன் தோற்றான்
- ☑ இந்திரஜித்
- ☑ சிதைந்த மலர்கள்
- ☑ பூனைகள் சண்டை

**கூத்து**

இவர் ஒரு சிறந்த கூத்துக் கலைஞர். பல கூத்துகளை ஆடியுள்ளார். குறிப்பாக "வல்லவன் வாலி" என்னும் கூத்தின் பிரதான பாத்திரமான சுக்கிரீபன் பாத்திரத்தை ஏற்று நடித்து, பலரதும் பாராட்டைப் பெற்றவர். வடமோடி ஆடற்கலையை நவீன நாடக பாங்குடன் கலந்து ஆடுவதில் இவர் கைதேர்ந்த கலைஞராவார்.

**கிறிஸ்தவ கூத்து**

2011 ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணம் புனித சவேரியார் பெரிய குருமடத்தினருக்காக அங்கு குருத்துவம் கற்றுக்கொண்டிருந்த சிரேஷ்ட குருத்துவ மாணவர்களைக் கொண்டு புனிதர் யோசப்வாஸ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றை வடமோடி கூத்தாக வடிவமைத்து, அதனை நெறியாள்கை செய்து யாழ்ப்பாணத்தில் அரங்கேற்றியதுடன், அதற்காக யாழ்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாணத்தில் திருமறைக் கலா மன்றத்தின் ஸ்தாபகர் அருட்தந்தை அவர்களால் கௌரவிக்கப்பட்டார்.

அக் கூத்தை மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் மன்னார் பிரதேசங்களில் தொடர்ந்து அரங் கேற்றியுள்ளார்.

இதற்காக இவருக்கு 2011.07.19 அன்று மன்னார் மாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தினரால் "கலையருவி" என்கின்ற பட்டம் வழங்கப்பெற்றது.

மட்டக்களப்பு மறை மாவட்ட கிறிஸ்தவ வாழ்வு ஒன்றியத்தினருக்காக புனித இன்னாசியாரின் வாழ்க்கை யைச் சித்தரிக்கும் நாட்டிய நாடகத்தினைப் பிரதியாக்கம் செய்து, வடிவமைத்து, அரங்கேற்றியுள்ளார்.

**குறும்படத் தயாரிப்பு**

குறும்படங்களுக்கான கதைப் பிரதியாக்கங்களில் ஆர்வமுடைய இவர், கிழக்கு மாகாண உள்ளூராட்சித் திணைக்களத்திற்காக இரண்டு குறும் திரைப்படங்களுக்கு பிரதியாக்கம் செய்து, அதில் ஒன்றான "மக்கள் சபை" என்கின்ற குறும்படத்தினை இயக்கி வெளியிட்டுள்ளார். உள்ளூராட்சி மன்றம் ஒன்றின் சபை அமர்வு தொடர்பான விழிப்புணர்வுக்காக தயாரிக்கப்பட்ட இக் குறுந்திரைப்படம் இன்றுவரை பயனுடையதாக அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கலை இலக்கியச் செயற்பாடுகள்

- ☑ 1980ஆம் ஆண்டு தொடக்கம் மட்டக்களப்பு காந்தீயப் பொதுப்பணி மன்றத்துடன் சேர்ந்து இயங்கியுள்ளார். 1982ம் ஆண்டு செயலாளராகச் செயற்பட்டு மட்டக்களப்பு ஊறணி சந்தியில் பாரதி சிலை நிறுவுதற்கு முக்கிய பங்காற்றியுள்ளால். இன்று அச் சிலை புனரமைக்கப்பட்டுள்ளது.
- ☑ 1987 ஆம் ஆண்டுமுதல்; தனது கிராமத்தில் தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவி அதனூடாக முத்தமிழ் வளர்க்கும்; முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்.
- ☑ 1988 ஆம் ஆண்டு தொடக்கம் காலஞ்சென்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் வி.ஆனந்தன் அவர்களால் அடையாளம் காணப்பட்டு, மட்டக்களப்பு வாசகர் வட்டத்தோடு இணைந்து தன்னை கலையிலக்கியச் செயற்பாடுகளில் தொடர்ந்து ஈடுபடுத்தியிருக்கின்றார். இவரது கலை - இலக்கிய செயற்பாடுகளின் ஆர்வத்தை தூண்டியது மட்டக்களப்பு வாசகர் வட்டம் எனலாம்.

- ☑ தொடர்ந்து "மட்டக்களப்பு மாவட்ட தமிழ் எழுத்தாளர் பேரவையின்" ஆரம்பகால உறுப்பினராக இருந்து பல செயற்பாடுகளில் முழுமூச்சாக ஈடுபட்டவர். சுமார் ஐந்து ஆண்டுகள் தலைவராக இருந்து தொடர்ச்சியாக மாதாந்தம் கலை இலக்கிய செயற்பாடுகளை செயற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.
- ☑ செங்கதிரோன் த.கோபாலகிருஷ்ணனின் செங்கதிர் சங்சிகையின் துணை ஆசிரியராக 32ஆவது இதழிலிருந்து இறுதிவரை செயல்பட்டிருக்கிறார்.
- ☑ மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர் அலுவலகத்தில் மூன்று நூல்களின் தொகுப்பாளராக அவை மூன்றையும் சிறப்பாக வெளியிட்டுள்ளார்.
- ☑ மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவியாளர் அலுவலகத்தில் காலாண்டுச் “செய்தி மடல்” ஒன்றை தொடர்ந்து வெளியிட்டுள்ளார்.
- ☑ உள்ளூராட்சி தொடர்பான சில கட்டுரைகளை எழுதி அவ்வப்போது “அரங்கம்” முதலான பத்திரிகைகளிலும் அவற்றை பிரசுரித்திருக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2010 ஆம் ஆண்டு தொடக்கம் கண்ணகி கலை இலக்கியக் கூடலின் பொதுச் செயலாளராக செயற்பட்டுவரும் கூடலின் ஸ்தாபக அங்கத்தவர் களுள் ஒருவராவார். இவ்வாண்டு மண்முனை தென்மேற்கு மகிழடித்தீவில் நடைபெறவுள்ள பத்தாவது கண்ணகி கலை இலக்கிய விழாவுக்கும் இவருடைய முழுமையான பங்களிப்பை வழங்கி வருகின்றார்.

**சித்திரக் கலைஞர்**

இவருள் ஒரு சித்திரக்கலைஞன் மறைந்து கிடக்கிறான். சிறு வயது முதல் நன்றாக வரையக்கூடிய திறன் பெற்றதனால் இவர் பல சித்திரங்களை வரைந்துள்ளார். குறிப்பாக பதாதைகளை எழுதுவதில் இவர் சிறந்தவராக ஒரு காலத்தில் இருந்திருக்கின்றார். காலவோட்டத்தில் டிஜிட்டல் பிரிண்டிங் இன் வருகையுடன் இவருடைய சித்திரக்கலை மறைந்துவிட்டது எனலாம்.

**பட்டிமன்ற பேச்சாளராக**

கதிரவன் பட்டிமன்ற பேரவை 2015 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போது அதன் தலைமை பொறுப்பை ஏற்று பட்டிமன்றத்தை ஆரம்பித்து வைத்தவர். இன்றுவரை முன்னிலைப் பேச்சாளராக பல பட்டிமன்றங்களில் தொடர்ச்சியாக பங்கேற்று வருகின்றார. எந்தத் தலைப்பிலும் தேடலுடன், முன்னா யத்தம் செய்து, அவையைக் கவரும் வகையில் பேசுவார். இன்று 150ஆவது பட்டிமன்றத்தை நெருங்கு கின்ற இந்த வேளையில் இவரது பங்களிப்பு மிகவும் முக்கியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பழகன் குரூஸினால் வரையப்பெற்ற ஓவியங்கள்

## பயிற்சி வளவாளர்

ஒரு பயிற்சி வளவாளராக சர்வதேச ரீதியான அங்கீகாரம் பெற்ற இவர் இன்று தேசிய அளவில் பல் தரப்பட்ட பயிற்சிகளை வழங்கி வருகின்றார்.

பயிற்சிகளை வடிவமைத்தல், பயிற்சிக் கையேடுகளை தயாரித்தல், பயிற்சிகளை நடாத்துதல் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல் என்று இவருடைய பயிற்சிச் செயற்பாடுகள் அமைகின்றன. பயிற்சியாளர்களுடன் மிகவும் அன்னியோன்யமாக பழகி வளர்ந்தோருக்காக சிறந்த நுட்பத்துடன் தன்னுடைய பயிற்சியை நடத்துவ தனால் பல்தரப்பட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களில் அங்கீகாரம் பெற்றவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முடிவாக...**

இவர் போன்ற ஒரு பல்துறை ஆளுமை கொண்ட கலை இலக்கியப் பணியாளரை நாம் பெற்றிருப்பது மகிழ்ச்சி தருகின்றது. இவரது பார்வையில் "கலை இலக்கியம் சமூக சேவை என்பதெல்லாம் நமது பொருளாதாரத்திலேயே தங்கியுள்ளது" எனும் கூற்றுக்கு அமைவாக வருமானம் தரும் தொழிலுக்கு இவர் காட்டிய ஆர்வம், தமிழ் இலக்கிய பரப்பிற்கு இன்னும் போதுமானதாக இல்லை என்பது என்னால் உணரப்படுகின்றது. இனிவரும் ஓய்வு காலத்தின் இவர் இன்னும் சாதிப்பார் என்கின்ற நம்பிக்கையோடு விடைபெறுகின்றேன்.

➤ **ச.பா.மதன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்பின் அகவையில் நான்

அன்பில் உறையும் ராஜாவே!
அன்பு எனும் நாமம் கொண்டவரே!
பாசப்பிணைப்பின் பங்காளரே!
மனக்குறை தீர்க்கும் மருந்தாளரே!

நேர்மையின் சிகரமே முடிசூடா நாயகனே!
உடல், உள்ளமதில் சின்னஞ் சிறுவனே!
அனைவரையும் ஈர்க்கும் கவர்ச்சியாளரே!
பிறரை மதிக்கும் பண்பு கொண்டவரே!

கதிரவனை சிறப்புடன் மிளிரவைத்த
நட்சத்திரத்தில் ஒன்றாக திகழ்பவரே!
இலங்கையில் மட்டுமன்றி இந்தியாவில்
உந்தன் குரலை மிளிரச் செய்தவரே!

அன்பிற்கு அறுபதா? நம்பமுடியவில்லை
இளந்துடினமும் சுறுசுறுப்பும்
உங்களிடம் படிக்க வேண்டும்
பலகலைகளை கற்கவேண்டும்.

இளந்தலைமுறைக்கு முன்னுதாரணமானவர்
கதிரவனுடன் தொடர்ந்து பயணித்து
அகவை நூறைத்தொட்டு விழாக்காண
வாழ்த்துகின்றேன் போற்றுகின்றேன்.

**திருமதி.நர்மதா அகளங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பழகன் குரூஸும் நானும்

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் ஒருநாள் அப்போது நான் குடும்பத்துடன் கொழும்பு வாசியாகவிருந்த காலம். ஆண்டு சரியாக ஞாபகமில்லை. 2000த்தின் நடுப்பகுதியாக இருக்கலாம். கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வாராந்த நிகழ்வொன்றில் உரையாற்று வதற்காக மட்டக்களப்பிலிருந்து அழைக்கப்பட்டிருந்தார் அன்பழகன் குரூஸ். அப்போது அவருடன் எந்த அறிமுகமும் எனக்கு இருக்கவில்லை.

கொழும்பில் நான் வசித்த காலத்தில் (1990 - 2010) மட்டக்களப்பாரைச் சந்திப்பது எப்போதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு மகிழ்ச்சி தரும் விடயம். மட்டக்களப்பு மாநில மண்ணின்மீதும் மக்கள்மீதும் இயல்பாகவே எனக்கிருந்த வற்றாத வாஞ்சை எனக்குள்ளே அப்படி யொரு மனோநிலையை வளர்த்துவிட்டிருந்தது.

அன்றையதினம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் அன்பழகன் குரூஸ் ஆற்றிய உரை அவரது மொழியாற் றலையும் இலக்கியப் புலமையையும் பேச்சுத் திறனை யும் வெளிப்படுத்தியது. அவரது எடுத்துரைப்பு முறையும் என்னை அவர்பால் ஈர்த்தது.

கூட்ட முடிவில் அவரைச் சந்தித்து உரையாடக் கிடைத்தபோதுதான் அவர் யார் என்பதை அறிய நேர்ந்தது. அவர் மட்டக்களப்பில் அற்புதராசா குரூஸ் அவர்களின் மகன் என அறிந்தபோது ஆனந்தித்தேன். புலிக்குப் பிறந்தது பூனையாகவில்லையென்பதையும் புரிந்து கொண்டேன்.

அன்பழகன் குரூஸின் தந்தை அற்புதராசா குரூஸ் அவர்களை 1970 களிலிருந்தே நான் அறிவேன். எம்மை அறிய வைத்தது இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும். தமிழரசுக் கட்சியின் அதுவும் மட்டக்களப்பில் செ.இராசதுரை அவர்களின் அரசியல் மேடைகளிலே பிரதான பேச்சாளர் அவர். குட்டிக்கதைகள் கூறி அரசியல் மேடைகளை அமர்க்களப்படுத்தும் வசீகரமான பேச்சாளர். கவிஞர் காசிஆனந்தன் - முகிலழகன் கந்தசாமி - எப்.ஜி.ஜெயசிங்கம் - அந்தோனிமுத்து (முத்தழகு) என்று நீளும் தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் பட்டியலில் அற்புதராசா குரூஸும் ஒருவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அம்பாறை மாவட்டம் காரைதீவைச் சேர்ந்த நான் 1979 இல் மட்டக்களப்பு முகத்துவாரத்தில் திருமணம்செய்து மட்டக்களப்பு வாசியானபின் அற்புதராசாகுரூஸ் அவர்களை அடிக்கடி சந்தித்துக்கொண்ட ஆசுவாசமாக இருந்து அவருடன் உரையாடவும் அரசியல் பேசவும் சந்தர்ப்பம் கிட்டியது. நாம் அடிக்கடி சந்தித்துக்கொண்ட இடம் கலாமாணிக்கம் - சாம்தம்பிமுத்து குடும்பத்தின் வாவிக்கரைவீதி வீடாகும். செனட்டர் மாணிக்கத்தின் வீடு. 1980 களிலிருந்து அற்புதராசாகுரூஸுடனான உறவும் ஊடாட்டமும் அதிகரித்தது. அக்காலம் திருமதி.செனட்டர் மாணிக்கம் (கலா அக்காவின் தாய்) உயிரோடிருந்த காலம். 1990 வரை அது நீடித்தது.

1990 இல் எனது அரசியல் ஈடுபாடு காரணமாக அன்றிருந்த அசாதாரண சூழ்நிலையில் நான் இடம்பெயர நேரிட்டதால் அவருடனான உறவும் ஊடாட்டமும் நூலறுத்த பட்டமாகியது.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் வைத்து அன்பழகன் குரூஸை அற்புதராசாகுரூஸ் அவர்களின் மகன் என அறிந்துகொண்ட நாளிலிருந்து அற்புதராசா குரூஸ் அவர்களைப்போலவே அன்பழகன் குரூஸையும் என் நெஞ்சுடன் நெருக்கமாக்கிக் கொண்டேன். மட்டுமல்லா மல் அவரது மாமி (திருமதி. பாய்வா) வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயத்தில் (தற்போதைய கிழக்குப் பல்கலைக்கழகக் கட்டிடத் தொகுதி) எனக்குச் 'சீனியர்'. சந்திரலேசா அக்கா என்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைப்போம். நடன ஆற்றல் நிரம்பியவர். சித்தப்பா நவரட்ணராசா குரூஸ் எனக்கு ஜூனியர். விடுதியில் ஒன்றாகத் தங்கியிருந்து படித்தோம். பின்னாளில் நவரட்ணராசா குரூஸூம் மட்டக்களப்பு மண்ணின் குறிப்பிடத்தக்க கவிஞராகவும் எழுத்தாளராகவும் விளங்கியவர். செங்கலடியில் திருமணம் முடித்தவர். ஆசிரியத் தொழில் புரிந்தவர். செங்கலடி நீர்ப்பாசனத் திணைக்களத்தில் நான் பணியாற்றிய 1983 - 1989 காலப் பகுதியில் நெருக்கமாகவும் குடும்ப நண்பர்களாகவும் ஊடாடினோம். இன்னொரு சித்தப்பா புஸ்பராசாகுரூஸ் அவர்களையும் எனக்குத் தெரிந்திருந்தது. கிராமசேவை அலுவலகராகப் பணிபுரிந்தவர். இப்படியாக அன்பழகன் குரூஸ் எனக்கு இன்னும் கூடுதலாக நெருக்கமானார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2008 ஜனவரியில் ஆரம்பித்து மட்டக்களப்பிலிருந்து எனது தனிமனித முயற்சியில் 'செங்கதிர்' எனும் கலை - இலக்கிய - பண்பாட்டுப் பல்சுவைத் திங்களிதழை வெளிக்கொணர்ந்தபோது, அதன் 16 ஆவது இதழிலிருந்து (வீச்சு 16 - ஏப்ரல் 2009) அன்பழகன் குரூஸ் அவர்களை அவரது வீடுதேடிச் சென்று 'செங்கதிர்' சஞ்சிகையின் துணை ஆசிரியராக இணைத்துக் கொண்டேன்.

'செங்கதிர்' சஞ்சிகையில் சேர்ந்துகொண்ட நாமிருவரும் பின்னர் 'கண்ணகிகலை இலக்கியக் கூடல்' - 'செங்கதிர்' இலக்கிய வட்டம் என்பவற்றினூடாகத் தொடர்ந்து கைகோர்த்துப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

அவருடனான நட்பும் - கலை இலக்கிய ஊடாட்டமும் - குடும்ப உறவும், தெளிந்த நீரோடைபோல ஓடிக் கொண்டிருக்கிறது. அந்த ஓட்டத்திற்குக் கதிரவன் கலைக்கழகமும் கதிரவன் பட்டிமன்றப் பேரவையும் ஊக்கியாகத் திகழ்கின்றன.

இந்தப் பின்புலத்தில், இன்று அகவை அறுபதை அடைந்திருக்கும் அன்பழகன் குரூஸை இவ்வருட இறுதியில் அகவை எழுபத்தைந்தை நிறைவு செய்யும் நான் 'நூறாண்டுகாலம் வாழ்க! நோய் நொடியில்லாமல் வளர்க' என வாழ்த்தி மனம் மகிழ்கிறேன்.

➤ **செங்கதிரோன் த.கோபாலகிருஸ்ணன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட அன்பு...




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டா...? ஒன்பதா...? தம்பிட வகுப்பு
என்று கேட்கும் ஆளின் சிறப்பு
கட்டழகாய் ஒரு பொடியன் நிற்கான்
கண்டேன் இரண்டாயிரத் தைந்து....!

கையிலொரு வெளரும் கயிறும்
கட கடன்று கதிரை போட்டும்
பையில் வடை வாழைப் பழம்
புத்தக வெளியீடு ஒன்று

மட்டு தமிழ் எழுத்தாளர்
மனம் விரும்பும் தலை வராகி
தொட்ட பணி சொல்வ தென்றால்
தோன்ற வேண்டும் ஆழுசையா...!

அப்போ எனக்கு இருப திருக்கும்
அன்புக் கன்று நாற்ப தாக்கும்
இப்படியாய் அடிக்கடி போவேன்
இவர்தான் நிகழ்வின் ஏற்பாட்டாளர்

அன்று முதல் அவரும் நானும்
அன்பையா இன்பா என்று
இன்று வயது அறுப தென்றால்
இல்லை பொய் இருப தென்பேன்

இரண்டாயிரத்து பதி னொன்று
இணைந்தோம் கண்ணகி கூடலிலே
முரண்டு பிடியாச் செயலாளர்
முன்னோக்கி இப்போ பத்து விழா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொன்றாய்ச் சொல்வ தென்றால்
ஓரிரு பக்கம் போதாது
பௌவியமாய் எம் பட்டிமன்ற
பதிவைச் சொட்டுச் சொல்லுகிறேன்

இரண்டாயிரத்து பதினைந்தில்...
இனிய தைப் பொங்கல் விழா
சிறப்பாய் நடத்த தமிழ்ச் சங்கம்
சீராய் அமர்ந்த நடுவர் ஐயா..!

புதுக்குடியிருப்பு கண்ணகியில்....
பதிந்த முதல் பட்டிமன்றம்
புதுமை கண்டு விருட்சமான
பத்தாண்டுப் பயணமிது

கதிரவன் உதிக்கும் நேரம் எல்லாம்
கனதியாய் பல ஆலோசனை
புதிய நற் சிந்தனை ஊட்டும்
புன்புறுவலே அதைக் காட்டும்

அன்பு ஐயா அன்பு அக்கா
ஆண்டவர் யேசு ஆதி சிவன்
இன்பம் பொங்கும் குடும்பத்தில்
இணைந்த கதிரவன் உறவுகள் நாம்

அறுபது என்ன ஆண்டு பல
ஐயா உங்கள் ஆலோசனை
பெறுவது எமக்கோ பேரின்பம்
பயணம் பேசும் கலைப் பணியை

**கதிரவன் த.இன்பராசா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்போடு நான் ...

அறிமுகம் ஆனவர்
ஆதவன் அரங்கில்
ஆனாலும் குழந்தை
அனுசரி எம்மில் ..

" அன்பு " நம்மில்
ஆக்கிய நட்பில்
ஆயித்திய மலையை
ஆராய்ந்த அன்பருள்
ஆனவன் நான் ..

தாகசாந்தி தடமாகி
தருமர் அவராகி
தானம் தர
வாகனம் வந்து
வாய்த்த வள்ளல் அன்பு ..

பட்டிமன்றத்தில்
பக்குவம் வரிகள்
வெள்ளை கடதாசியில்
வெடுக்காய் வெளித்தோன்றும் ..

என்னடா புதுவையூர்
எப்படியும் இடைக்குள்ள பேசுவார்
முசுப்பாத்தி கொஞ்சம்
முண்டாசு போல் இருக்கும் ..

இந்து , கிறிஸ்த்தவம்
இணைந்த இவரால்
பிணையும் தமிழ்
பேசிய பின் கேளீர் ..

வயதறியா வாலிபன்
வதனத்தில் வரி அற்றான்
நிதானத்தில் நிமலன்
நீடூழி நீர் வாழ்வீர் ..

அறுபது ஆனாலென்ன
ஆக்கிய தமிழ்போல்
அறுபதனாயிரம்
ஆளனும் அன்பின் ஆன்மா ..

அகவை தின வாழ்த்துகள்
அன்பு ஐயா.

**அன்புடன்**
**புதுவையூர் பு . தியாகதாஸ்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பு ஐயாவும்
## கதிரவன் பட்டிமன்றப் பேரவையும்

1976 ஆம் ஆண்டு வித்தகர் கலாபூசணம் சின்னத்தம்பி தங்கராசா அவர்களால் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் தாபிக்கப் பெற்ற கதிரவன் கலைக்கழகம் பல்வேறுபட்ட தளங்களில் கலைச் செயற்பாடுகளை முன்னெடுத்ததன் விளைவாக கதிரவன் கலைக்கழகத்தின் இன்னொரு பரினாமமாக மட்டக்களப்பில் பட்டிமன்றக் குழுவை ஆரம்பிக்க 2015 ஆம் ஆண்டு கல்லடியில் அன்பழகன் ஐயா, கதிரவன் த.இன்பராசா மற்றும் ச.பா.மதன் ஆகியோரின் சந்திப்பில் ஏற்பட்ட ஆக்கபூர்வமான கலந்துரையாடலின் விளைவாக உதயமானதே 'கதிரவன் பட்டிமன்றப் பேரவை' இக் கலந்துரையாடலின் பின்னர் 2015.01.18 ஆம் திகதி கதிரவன் த.இன்பராசாவின் ஒழுங்குபடுத்தலில் மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொங்கல் விழா' நிகழ்வில் மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் 'நகைச்சுவைப் பட்டிமன்றம்' முதல் மேடை கண்டது. இந்த முதல் பட்டிமன்றத்தினை தலைமை தாங்கிய பெருமை அன்பழகன் ஐயாவையே சாரும் .

இன்றுவரை 147 பட்டிமன்றங்களை இலங்கை, இந்தியா ஆகிய நாடுகளில் பல இடங்களில் நடத்தி வெகுவிரைவில் 150 ஆவது பட்டிமன்ற விழாக் காண இருக்கின்ற கதிரவன் பட்டிமன்றப் பேரவையின் அத்திபாரங்களில் அன்பழகன் ஐயா மிக முக்கியமானவர். பட்டிமன்றப் பேச்சாளர்களில் வயது மூத்தவராகக் காணப்பட்டாலும் என்றென்றும் இளமைத்துடிப்போடு பல ஆளுமை கொண்டவராகவும் எம்மையெல்லாம் சிறப்பாக வழிநடத்துபவராகவும் தனது கலைச் செயற்பாடுகளை முன்கொண்டு செல்கின்றார்.

பட்டிமன்றங்களில் கருத்தாளமிக்க கருத்துக்களை விதைப்பதில் வித்தைக்காரர் ஐயா. பட்மன்றங்களில் பங்குபற்றும்போது அவரது சிறப்பம்சம் என்னவென்றால் சகல பட்டிமன்றங்களிலும் தலைப்புக் கேற்ப தட்டச்சுச் செய்தே விடயங்களைக் கொண்டுவருவார். இதற்காக நேரத்தை ஒதுக்கி எவ்வாறு ஒழுங்குபடுத்தி வருகின்றார் ஐயா என பல தடைவை வியந்ததும் உண்டு . 'ஆமாக்கும் ஓமாக்கும் அதுக்குத்தானாக்கும்...' என்ற நகைச்சுவை கலந்த பாடல் அவரது தனித்துவமே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய பேச்சாளர்களையும் தலைப்புத் தொடர்பாக வழிப்படுத்தும் ஆற்றல் கொண்டவர். பேசும் தலைப்புத் தொடர்பாக விமர்சன நோக்கோடு வாதங்களை ஏற்படுத்தி பேச்சாளர்களை தயார் படுத்தச் செய்யும் நுட்பம் தெரிந்தவர். இரவு பகல் பாராது மட்டக்களப்பில் பல இடங்களிலும் மலையகம், வடமாகாணம், திருகோணமலை, அம்பாறை மற்றும் இந்தியா வரையும் எம்மோடு பயணித்து இளமைத்துடிப்போடு செயற்படும் செயல் வீரன் ஐயா.

தன்னுடைய மகிழுந்தை பல்வேறு இடங்களுக்குப் பட்டிமன்றத்துக்காகச் செல்வதற்கு தானே சாரதியாக இருந்து எம்மையெல்லாம் அழைத்துச் செல்லும் அன்பர். தனது சொந்த நிதியை பேரவைக்காக பல தடைவைகள் செலவு செய்துள்ளார். மேலும் கலை நிகழ்வுகளுக்காக பல இடங்களுக்கு செல்லும் போது தனது வீட்டுக்கு அழைத்து அன்போடு விருந்தளித்து மகிழும் மனங்கொண்ட மனிதர். அவர் மட்டுமல்ல அவரது மனைவி மகன் கூடப் பேரவை அங்கத்தவர்களோடு நட்புப் பாராட்டுவதோடு பல பட்டிமன்றங்களின் போது பார்வையாளர்களாக கலந்து எம்மை உற்சாகப்படுத்தி வருகின்றார்கள். அத்தோடு ஆயித்தியமலை அன்னை சகாயமாத ஆலய பக்தர்களுக்காக பட்டிமன்றப் பேரவையால் முன்னெடுக்கப்படும் தாகசாந்தி நிகழ்வில் பங்கு பற்றும் பேரவை அங்கத்தவர்களுக்காக வருடாவருடம் ஐயாவும் அவரது குடும்மத்தாரும் விருந்துபசாரம் செய்வதை மறக்கவே முடியாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்பழகன் ஐயா வயது வித்தியாசம் பாரது என்மோடு நண்பராக பழகும் பக்குவம் தெரிந்தவர் பேரவைச் செயற்பாடுகளுக்கு மாத்திரமல்லாது எமது வாழ்விக்கான வழிகாட்டல்களைச் செய்வதிலும் சாலச் சிறந்தவர் . கிறித்தவ மதம் சார்ந்தவராக இருந்தாலும் சகல மதங்களையும் மதிக்கும் பண்பு கொண்டவர். பிறர் மனம் நோக நடந்ததை கண்டதே இல்லை. பட்டிமன்றங்கள் பேசச் செல்லும் போது யாராவது விட்டுக் கொடுக்க வேண்டிய நிலை வந்தால் பெருமனதோடு தாமாக முன்வந்து மற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கும் மனத்திறன் மிக்கவர் . பேரவை சார்ந்த கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு பல ஆக்க பூர்வமான கருத்துக்களை முன்வைப்பவர் தவிர்க்க முடியாத காரணங்களால் வருகை தரமுடியாத பட்சத்தில் முன்கூட்டியே அறிவித்து அனுமதி பெறுவதோடு தனது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்துக்களை தொலைபேசி வாயிலாக முன்வைப்பு செய்யும் அர்ப்பணிப்பு மிக்கவர் .

பட்டிமன்றம் சார்ந்த புகைப்படங்களை ஆவணப் படுத்துவதோடு இந்திய பட்டிமன்றப் பயணம், மலையகப் பயணம் மற்றும் வடமாகணப் பயணங்களுக்காக நாட்காட்டிகளை செவ்வனே தயாரித்து எம்மை வழிப்படுத்திய ஆலோசகர். 100ஆவது பட்டிமன்ற விழாவிக்காக முன்னின்று உழைத்தவர்களுள் மிக முக்கியமானவர். இதுவரை 100 மேற்பட்ட பட்டிமன்றங் களில் பேச்சாளராகவும் பல கவியரங்களில் கவிஞராகவும் செயற்படும் நல் கவிஞரும் கூட ஐயா, பேரவையால் முன்னெடுக்கப்படும் ஔவை விழாவிலும் ஆலோசகராகச் செயற்பட்டு ஆக்கபூர்வமாக எம்மையெல்லாம் வழிப்படுத்துபவர்.

எனவே எங்கள் பட்டிமன்றப் பேரவையின் மிகப் பெரும் தூண் அன்பழகன் ஐயா என்பதை மறுப்பதற்கு ஏதுமில்லை. அவர் அறுபதாவது வயதில் வைர விழாக் காண்கின்றார் எம்மோடு இணைந்து நீண்ட கலைப்பணி தொடர்பவர் என்றும் தேக ஆரோக்கியமும் நிறைவான வளங்களும் பெற்று இன்று போல் என்றும் இன்புற்று வாழ வாழ்த்துகின்றேன் வாழ்க வாழ்க வாழ்கவே அன்பு ஐயா.

**கவிஞர் அழகு தனு**

**செயலாளர்**
**கதிரவன் பட்டிமன்றப் பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கதிரவன் பட்டி மன்றப் பேரவை ஆலோசகர் மணிவிழா நாயகன் அன்பழகனுக்கோர் உதவும் கரங்களின் வாழ்த்துக் கவி

அறுபது வயதினில் அன்பாய் விளங்கும்,
அருந்தவமுடையீர் போல் அறிவாய் திகழும்,
அறிவொளி தூண்டும் எழுத்தின் அண்ணல்,
அன்பு பெருக்கிடும் எம் அன்பழகன் குரூஸ்

கவிஞராய் கலைஞராய் நல் அன்பராய்
கண்ணகி பேரொளி வாழ்வில் துலங்க
கண்ணகி கூடல் அரங்கத்தின் செயல் வீரர்
கறைபடியா வாழ்வினில் காலப் பொக்கிஷம்

ஆலோசனைகளால் அமுதம் சொல்வீர்,
அரங்கமெலாம் அருங்கருத்து பகரைவீர்
கதிரவன் மேடைகளில் கருத்தின் சுடர்,
கடிதாய் புலமையின் வெளிச்சம் கௌரர்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமையின் ஓசை எழுப்பும் இளம்பிறை
இனிய மனதின் இசைப்பேர் ஒளியிவர்
மூப்பென்று சொல்லாத முழுமை நலம்,
முடிவற்ற உழைப்பின் முன்னணி அலம்!

பண்பின் வடிவாய் படைத்த பண்பாளர்
பாவின் மொழியில் பரந்த விற்பன்னர்
நூல்வழி வந்த நல் நிறைவின் நிபுணர்
நெஞ்சில் என்றும் நிலைக்கும் மானிடர்

உதவும் கரங்களுடன் உணர்வுடன்
உறவாடும் உன்னத மாண்புள்ள
உத்மர் குரூஸ் உளம் மகிழ
உண்மையாய் வாழ்த்துகின்றோம்.

புகழின் முத்தாய் புனிதர் போல் வாழ்வீர்
புதுமை பேசும் புகழொளி பற்பல பெறுவீர்
வாழ்வில் என்றும் நலம் பெற்று வளம் பெற்று
வாழ வாழ்த்துகிறோம் வாழிய வாழிய...

➤ **ச.ஜெயராஜா,**

**தலைவர், உதவும் கரங்கள் சிறுவர் இல்லம்,**
**மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.**
esdohelpingha@gmail.com.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புக்கு அறுபதா...?



சாந்தத்தின் இருப்பிடம்
சகலகலா வல்லவன்
சத்தியத்தின் சொரூபன் - எம்
அன்புக்கு அறுபதா...?

பார்த்துமே புன்முறுவல்
பத்திரமாய் உபசரிப்பார்
பத்தினியின் துணையோடு - எம்
அன்புக்கு அறுபதா....?

இளமை உனக்கு
இறைவனின் கொடையல்லோ
இளைஞனாய் இருக்கும் - எம்
அன்புக்கு அறுபதா....?

சிந்தனையில் இளமை
சிறகடித்து பறக்குதல்லோ
சீர் மிகுந்த - எம்
அன்புக்கு அறுபதா....?

பெயரில் உள்ள அன்பு
உன் உணர்விலே உள்ளதல்லோ - எம்
அன்பு மிகு அன்புக்கு
வைரவிழா வாழ்த்துகள்

➤ **திரு.சி.சுதேஸ்வரன்**

**உபசெயலாளர், கதிரவன் பட்டிமன்றப் பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாடு மாறா அன்பாலன் வாழ்கவே



நையாண்டிப் பேச்சி
நாகரிகப் பேச்சி
அறிவுரை சொல்லும்
அன்பான பேச்சி....

தவறுகள் சொல்லி
திருத்தியும் சொல்லி...
வாழ்த்துகள் சொல்லி...
வழிகாட்டும் ஆலோசகன்.

நல்ல ரசிகன்...
காதல் செய்யும் இளைஞன்...
கலையோடு பயணம்...
பண்பாடு மாறா...
பண்பான உள்ளம்.

**கவிஞர் தங்கயுவன்**

அவன் அருளால்...
இன்பம் சூழ்ந்து வாழ...
யுவன் நிறைவாய் வாழ்துகிறேன்
அன்பு ஐயா வாழ்கவே...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நற்பணியோடு நலமோங்கி வாழ்க

கதிரவன் கலைக் கழகத்திற்கும், எனக்குமான தொடர்பு இருபது ஆண்டுகளை கடந்து செல்கின்றது. கதிரவன் கலைக்கழகம் புத்தக வெளியீடுகள், கவியரங்குகள், பட்டிமன்றங்கள், நாடகங்கள், கௌரவி புகள் முதலான பல்வேறு கலை-இலக்கிய-சமூக முன்னேற்ற நிகழ்வுகளை நடத்துகின்றபோது எனது பிரசன்னமும் அதிகளவாக இருந்திருக்கிறது.

கதிரவனின் இவ்வாறான நிகழ்வுகளின் போதும், மட்டக்களப்பில் நடைபெறுகின்ற கலை இலக்கிய செயற்பாடுகளின் போதும் மணிவிழா நாயகன் அன்பழகன் குரூஸ் அவர்களின் செயத்திறன் மிக்க நடவடிக்கைகளை கண்டு வியந்துள்ளேன்.

மட்டக்களப்புத் தமிழ் சங்கத்தின் பொங்கல் விழா மட்/மட்/புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் 18.01.2015 ஆம் திகதி நடைபெற்ற போது கதிரவனின் முதலாவது பட்டிமன்றம் அங்கு அரங்கேற்றம் காணுகின்றது. அந்தப் பட்டிமன்றத்தில் நடுவனம் புரிந்தவர் அன்பழகன் குரூஸ். தற்போது கதிரவன் பட்டிமன்றம் பத்து வருடங்களைக் கடந்து நூற்றியம்பதாவது பட்டிமன்றத்தில் காலடி எடுத்து வைக்கும் தருணத்தில் அதன் ஆலோசகருக்கு அறுபதாவது அகவை தினம் கொண்டாடுவது வரவேற்கத்தக்கது.

> **சைவப்புரவலர் வி. ரஞ்சிதமூர்த்தி**
> **தலைவர், மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகவை அறுபதில் அன்பழகன் வாழ்க...!



கதிரவனின் பட்டிமன்றங்கள் மட்டக்களப்பில் மாத்திரம் இன்றி, இலங்கையில் மாத்திரமின்றி, இந்தியா - தமிழ்நாட்டிலும் அரங்கேற்றங்கள் கண்டுள்ளது. அதிகமான பட்டிமன்றங்களில் அன்பழகன் குரூஸ் அவர்கள் ஒரு பேச்சாளராக, நல்ல பண்பாளராக காணப்படுவார். தூய தமிழில், பற்பல எடுத்துக் காட்டுகளுடன் இவரின் பேச்சுக்கள் அமைந்திருக்கும். இடையிடையே நல்ல கவிதைகளும் சொல்வார். பாடல்களும் பாடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவையாகவும் சிந்திக்க கூடிய வகையிலும் கதிரவன் பட்டிமன்றப் பேரவை நடத்தும் பல பட்டி மன்றங்களை நான் பார்த்திருக்கின்றேன்.

செயலூக்கம் கொடுக்கும் வகையில் இவர்களின் பட்டிமன்றம் அமையும். அத்தகைய இப் பட்டிமன்றத்தின் ஆலோசகர் அன்பழகன் அவர்கள் இன்று அறுபதாவது வைர விழாவில் மனம் மகிழ்ந்திருக்கின்றார்.

ஒரு அணியாகச் செயற்படுகின்றவர்கள் அந்த அணியில் உள்ளோருக்கு ஏற்படும் இன்ப துன்பங்களில் பங்கெடுக்க வேண்டும். அவைதான் எமது பண்பாடு. அந்த வகையில் கதிரவன் கலைக் கழகம் தங்கள் அணியில் உள்ளோரையும், ஏனையோரையும் மதித்து, உரிய நேரத்தில் உரிய கௌரவங்களை வழங்கும் சிறந்த கலை இலக்கிய அமைப்பாக செயற்படுகின்றது.

அறுபதாவது அகவையில் தடம் பதிக்கும் அன்பழகன் நல் வளமும், நலமும் பெற்று வாழ வாழ்த்துவதுடன் எமது கலை, இலக்கியம், பண்பாடு சீர் பெற்றுயர இனிவரும் காலங்களிலும் சேவை புரியவேண்டுமென பிறந்தநாள் வாழ்த்துகளைக் கூறி நிறைவு செய்து கொள்கின்றேன்.

➤ **தேசபந்து மு. செல்வராசா**

**தலைவர், மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபது

## ஒரு புது வரலாறு

அறுபதாம் ஆண்டின் அற்புத திருநாள்
அன்பு அண்ணன் பிறப்பெடுத்த நன்நாள்
அறுபதாம் ஆண்டு ஒரு அறுசுவை பண்டிகை
அருமை தரும் தருணங்கள் இதயத்தில் கண்டிகை!

முடிந்த பாதைகள் நினைவுகள் மாதாகி
முன்னே போகும் கனவுகள் காற்றாய் வளர்க
வந்த நாள் இன்று பூக்களாய் விரிந்து
வாழும் நாளெல்லாம் புன்னகை சிரித்து!

அன்பும் ஆர்வமும் செழித்து வளர
அமுதமாய் மாறட்டும் நாளும் நளினமாய்
உங்கள் சிரிப்போடு பலரும் பூவாகட்டும்
உங்கள் பயணம் இன்னும் பல பரிசாகட்டும்!

வாழ்த்து வரங்கள் உங்கள் வீதி தொட்டிட
வானவில் போலே வாழ்வின் வண்ணங்கள் ஒளியட்டும்
அறுபது என்றால் இறக்கம் இல்லை - அது
இன்னொரு புது வரலாற்றின் தொடக்கம்!

**கவிமகள் ஜெயவதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உள்ளூராட்சி வளர்ச்சியின் உன்னத ஒளி அன்பழகன் குரூஸ்

அன்பழகன் குரூஸ் அவர்களின் 60ஆவது பிறந்த நாளை நாம் கொண்டாடும் வேளை, இது வெறும் வயதின் வெற்றி அல்ல, வாழ்க்கையின் மூலம் ஒரு சமூக மாற்றம் எப்படி விரிந்திருக்கிறது என்பதற்கான அழகிய சான்றாகும். பல தசாப்தங்களாக, அவர் ஒரு அருமையான பயிற்சியாளர், வழிகாட்டி, அறிவு தாங்கி மற்றும் சமூக மாற்றத்தின் ஊக்கமாக இருந்து வந்துள்ளார்.

இவர் சமூக வளர்ச்சி துறையில், குறிப்பாக உள்ளூராட்சி நிர்வாகம், மக்கள் பங்கேற்பு, முன்னணித் தன்மையுடன் கூடிய தலைமைத்துவ வளர்ச்சி, மற்றும் சமூக பொறுப்புணர்வு போன்ற துறைகளில் தனித்த அடையாளம் பதித்தவர். உள்ளூராட்சி மன்றங்களின் சட்டத் தன்மைகள், அதிகாரங்கள், பங்கேற்பு திட்ட மிடல்கள், நிதி ஒதுக்கீட்டுத் தீர்மானங்கள் ஆகியவற்றைத் தெளிவாகவும் எளிமையாகவும் மக்களுக்கு விளக்கும் திறன் இவருக்கே உரியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் நடத்தும் பயிற்சிகள் ஒரு தனித்தன்மையைக் கொண்டவை. மரபணு பாடச்செறிவுகளாக அல்லாமல், மக்கள் நலன்களை மையமாகக் கொண்டு, பங்கேற்பு முறை வழியில், வாழ்வியல் கதைகள் மற்றும் அனுபவங்களை கொண்டு, சுயவிசாரணை ஊக்குவிக்கும் முறையில் அமைக்கப்பட்டவை. பயிற்சியில் பங்கேற்பவர்கள், கேள்விகேட்டுப் போகாமல், கலந்துரையாடி, தங்கள் சொந்த அனுபவங்களை பகிர்ந்து, ஒன்றுக்கொன்று கற்றுக் கொள்ளும் சூழல் உருவாக்கப்படுவதுதான் அவரது பயிற்சியின் சிறப்பம்சமாகும்.

அவரது பயிற்சிகள் ஒரு கிராமத்தில் உள்ள பெண்கள் குழுவாக இருந்தாலும், நகரத்தில் உள்ள ஊராட்சி உறுப்பினர்கள் குழுவாக இருந்தாலும், அவர் அவர்களுக்கு ஏற்ற வகையில் அவர்களது மொழியில், அவர்களின் நிலையை மதித்து நடத்துகிறார். இவர் நடத்தும் பயிற்சிகள் மூலமாக பலர் உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான சட்டங்களை, கடமைகளை, பொது நிதி செலவுகளைப் புரிந்து கொண்டு, தங்கள் உரிமைகளை விழிப்புணர்வுடன் கேட்கக் கற்றுக் கொண்டுள்ளனர்.

இவரது பயிற்சியினால் இன்று பலர் சுயமாகப் பேசத் தொடங்கியுள்ளனர், தங்களை சமூக தலைவர்களாக மாற்றியுள்ளனர், சமூக நீதிக்காகக் குரல்கொடுக்கத் தொடங்கியுள்ளனர். குரூஸ் அவர்கள் இளைஞர்கள், பெண்கள், உள்நாட்டு அகதிகள், கல்வி கற்றோர், கிராமவாசிகள் என எல்லா தரப்பினரிடையிலும் ஒரே அக்கறையுடன் பயிற்சி வழங்கியுள்ளார். அவரிடம் பயின்ற பலர் தற்போது உள்ளூராட்சி உறுப்பினர்களாக,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகவியல் நிபுணர்களாக, சமூக அமைப்புகளை முன்னெடுத்த தலைவர்களாக பணியாற்றி வருகின்றனர். இவர் ஒரு பயிற்சியாளராக மட்டும் இல்லாமல், ஒரு வழிகாட்டியாகவும், நம்பிக்கை ஊட்டும் தலைவராகவும், மக்களின் வாழ்வில் மாற்றத்தைத் தேடித்தந்தவராகவும் இருக்கிறார். அவரது பணிகள் மட்டக்களப்பிலிருந்து மன்னார் வரை, திருகோணமலை முதல் அம்பாறை வரை பல மாவட்டங்களில் தனது தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

அவர் ஒரு பயிற்சி நடத்தும் இடத்தை வெறும் அறிவுக் கூடமாக அல்ல, ஒரு மாற்றத்தின் விதை நடக்கும் நிலமாக மாற்றுகிறார். அவர் விதைத்த அறிவு விதைகள் இன்று பல சமூகங்களிலும் வளர்ந்து, பல புதிய தலைவர்களை உருவாக்கி வருகின்றன.

இவ்வளவு நீண்ட பயணத்தின் பின்னணி ஒரு மிகப்பெரிய சமூகக் கதையாக நம்மைத் தொடுகிறது. திரு. அன்பழகன் குரூஸ் அவர்களின் அறம் நிறைந்த சேவையை நாம் இப்போது மனமார்ந்த நன்றியுடன் நினைவுகூர்கிறோம்.

அன்புள்ள குரூஸ் ஐயா, உங்கள் அறுபதாவது பிறந்த நாள் இன்பகரமாக அமைய வாழ்த்துகிறோம். உங்கள் வாழ்க்கை ஒரு ஒளி வீசும் பயணம். உங்கள் பயணத்தின் ஒளிச்சாயல் இன்னும் பலரையும் வழிநடத்தட்டும்.

### ➤ பாலமீன்மடு இரா கலைவேந்தன்

**இணைப்பாளர், கதிரவன் பட்டிமன்றப்பேரவை**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# *A Tribute to Mr. Anpalagan Croos (Anpu)*
# *(Celebrating 60 Years)*

*Sixty years of wisdom, yet still so young,*
*Anpu's words, like rivers, forever flow and hum.*
*A writer, a poet, with a heart so wide,*
*Anpu brings to life the stories that in silence hide.*

*In the world of governance, Anpu lights the way,*
*A trainer, a guide, turning night into day.*
*With knowledge profound and vision so clear,*
*Anpu shapes the future, casting away fear.*

*As an organizer, Anpu brings us together,*
*Uniting us all, no matter the weather.*
*His speeches inspire, his actions define,*
*Anpu's leadership spirit will forever shine.*

*Though time marches on and years unfold,*
*Anpu's passion and drive remain strong and bold.*
*A practical man with a heart full of grace,*
*Anpu walks with the world at his own steady pace.*

*So, here's to sixty, but there's more to come,*
*Anpu's life of service, ever-lasting and young.*
*For in his thoughts, his actions, and his words,*
*The legacy of Anpu soars like birds.*

*May the years ahead be as bright as the past,*
*Filled with wisdom, joy, and a love that will last.*
*For sixty is not an end, but just the start,*
*Of Anpu's journey that lives in the heart.*

---

R. Kalaiventhan

Coordinator, Kathiravan Pattimanra Peravai



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பிற்கு 60

ஆமாக்கும் ஓமாக்கும் அதுக்குத் தானாக்கும்
ஆமாக்கும் ஓமாக்கும் அதுக்குத் தானாக்கும்

அன்பு ஐயாட அறுபது எதுக்குத்தானாக்கும்
அழகான அவரைப்பற்றி சொல்லத்தானாக்கும்
ஆழமான அறிவு கொண்டவர் அன்பு தானாக்கும்
ஆடி ஓடி வேலை செய்பவர் இன்றும் தானாக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளமை கொஞ்சும் இன்முகம் எதுக்குத்தானாக்கும்
இனிய குரலில் பேசிப் பேசி மயக்கத்தானாக்கும்
ஈந்தளிக்கின்ற குணத்தில் இவர் கர்ணந்தானாக்கும்
ஈகை செய்த இயேசு இவர் இறைவன் தானாக்கும்

உயிரைப் போல நேசிக்கிறார் உறவைத்தானாக்கும்
உயிரை விட நேசிக்கிறார் தமிழைத்தானாக்கும்
ஊர் ஊராய் பட்டிமன்றம் பேசுவாராக்கும்
ஊர்க் கதைகள் பேசமாட்டார் நல்லவராக்கும்

எளிமை கொஞ்சம் இருக்கிறது இவரிட்டானாக்கும்
எட்டாத உயரம் தொடுவாருதானாக்கும்
ஏக பத்தினி விரதன் எங்கட ஐயாதானாக்கும்
ஏலுமெண்டா பாப்பம் எண்டு சொன்னவராக்கும்

ஐயோ வயதாகல்ல என்றவராக்கும்
ஐடியா தாறதில் நல்ல மன்னவராக்கும்
ஒழுங்காக அலங்காரம் பண்ணுரவராக்கும்
ஒரு படியும் இறங்காமல் நின்றவராக்கும்

ஓயாமல் பரீட்சைகள் செய்றவராக்கும்
ஓதியபடி ஒழுகியவர் ஐயாதானாக்கும்
ஔடதம் இல்லா வாழ்க்கை கொண்டவராக்கும்
ஔவை வழி வாழ்க்கை கண்டவராக்கும்

➤ **சோலையூரான் ஆ. தனுஸ்கரன்**

**உப தலைவர். கதிரவன் பட்டிமன்றப் பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் அ.அன்பழகன் குரூஸ் அவர்களுக்கான

# வாழ்த்துப் பாமாலை

கலையதன்பால் ஊக்கமிகுதி கொண்டு
உடனிருந்து சேவைசெய்ய
உடனொன்றாய் கைகள்கூடி
எம்மரிய சேவையதை தட்டிக்கொடுத்து
தடம்பதித்தீர் பெயர்விளங்க
கூடி நாங்கள் கூவுகிறோம்
உங்கள் வாழ்வு உயர்வு பெற

கலைஞர் உளம் மகிழ்வுபெற
கருத்திட்டம் வகுத்து வைத்து
களமிறங்கி கண்டறிந்து கனதிகள்
தளர்வுறுத்தி கலைபலவும் இட்டவர்நீர்!

எமது கதிரவன் கலைக்கழகம்
முனைப்புறுக உன்னதமாய்
பல நற்பெயரை ஈட்டித் தந்த
முதற்குருவாய் காணுகிறோம்
எங்கள் இயங்குநிலை உள்ளமட்டும்
உச்சரிப்போம் உங்கள் பெயர்
சென்ற இடங்களெலாம்
செழிப்புடனே உயர்வுபெற வாழ்த்துகிறோம்!

பட்டிமன்ற பேச்சாளராய்
பலகலையும் பூண்டு வந்து
கலைக்கழக சிரேஷ்ட உறுப்பினராய்
பல்வேறு பரிணாமம் உங்களுக்கு...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் காலம் எங்கள் காலம்
கலையதுவும் மலர்ந்த நேரம்
கலைகளோங்க கனிவுகொண்டு
கூடிநாங்கள் பணியியற்ற
நாணதாகி நின்றவரே
வாழ்த்துகிறோம் வாழ்கவென்று
போற்றுகின்றோம் புகழ்ந்துரைத்து
பாராட்டுகின்றோம் பாமாலை கொண்டு
வாழ்க! வளர்க! உயர்க!

**➤ கவிஞர் ரவிகிருஷ்ணா**

**உறுப்பினர், கதிரவன் கலைக் கழகம்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலோசகர்; ஆலோசகருக்காக...

1976 ஆம் ஆண்டு மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் தோற்றம் பெற்ற கதிரவன் கலைக் கழகம் தொடக்க காலம் தொட்டே கலை- இலக்கிய- சமூக செயற் பாடுகளில் இயங்கி வருகின்றமை நான் அறிந்த விடயம். எனது சிறுபராயம் முதலே கதிரவன் கலைக் கழகத்தின் கூத்து, நாடகம், கரகம் முதலான கலை நிகழ்வுகளை பார்வையிட்டுள்ளேன்.

கதிரவன் கலைக் கழகத்தின் தலைவராக கதிரவன் த.இன்பராசா பொறுப்பேற்ற காலம் தொட்டு கிட்டத்தட்ட இருபது ஆண்டுகள் நானும் இக்கழகத்தோடு சேர்ந்து பயணிக்கின்றேன்.

1976 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 வரை கதிரவன் கலைக் கழகம் கிராமியக் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து முன்னேறி வந்த நிலையில் 2005 தொடக்கம் கிராமிய கலைகளோடு வீதி நாடகம், தாளலயம், கவியரங்கம், சமூக சேவைகள், புத்தக வெளியீடுகள், கலை- இலக்கிய-பண்பாடு சார்ந்த நிகழ்வுகள் முதலானவற்றில் தடம் பதித்தது.

இந்தப் பின்புலத்தில் 2015 ஆம் ஆண்டு மட்/மட்/ புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் மட்டக்களப்புத் தமிழ்ச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொங்கல் விழா நடைபெற்ற போது கதிரவன் கலைக் கழகத்தின் பட்டிமன்றம் ஒன்றும் அரங்கேற்றம் கண்டது. இப் பட்டிமன்றத்திற்கு கவிஞர் அன்பழகன் குருஸ் அவர்கள் தலைமை வகித்தார். இதற்கு முந்தி கவிஞர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பழகன் குருஸ் அவர்களை நான் அறிந்திருந்தாலும் இந்த முதலாவது பட்டிமன்றத்தில் இருந்து தற்போது பத்து வருடங்கள் கடந்த நிலையில் நாங்கள் நல்ல உறவாக, ஒரு குடும்பமாக பயணிக்கின்றோம்.

பட்டிமன்றத்திற்கென கதிரவன் பட்டிமன்றப் பேரவை தொடங்கப் பெற்று 10 ஆண்டுகள்.

அமைப்புக்கள் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒரு மாதத்துக்குள், ஓரிரு வருடங்களுக்குள் முரண் பட்டு பிரிகின்ற, இரண்டாக உடைகின்ற கால கட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு கிராமங்களில் இருக்கின்ற கலை இலக்கியவாதிகளை ஒன்றிணைத்து இதுவரை 146 பட்டிமன்றங்கள் அரங்கேற்றம் செய்து ஒன்றாக பயணிப்பென்பது இந்தப் பட்டிமன்ற பேரவையின் ஒற்றுமையை வெளிக் காட்டுகின்றது. ஒற்றுமை, புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு இவற்றையெல்லாம் கட்டிக் காத்து வந்த பெருமை அன்பழகன் அவர்களையும் சாரும். இவருடைய ஆலோசனை, வழிப்படுத்தல், அமைதியான தேவை ஏற்படும்போது ஆவேசமான பேச்சுக்கள் அனைத்துமே கதிரவன் பட்டிமன்ற பேரவைக்கு ஒரு சக்தியாக அமைகின்றது. அந்த சக்திக்கு இன்று அறுபது வயது. அறுபது வயது பூர்த்தியை கதிரவன் பட்டிமன்றப் பேரவை வைர விழாவாக கொண்டாடுவதும், அன்பு மலர் வெளியிடுவதும் மகிழ்வை கொடுக்கின்றது. வாழ்க அன்பழகன் குரூஸ்.

**திரு அ.குலேந்திரராசா (அதிபர்)**

**ஆலோசகர் - கதிரவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அறுபதை அடைந்த அன்பான அழகனுக்கு**

**ஆழமாய் நேசித்து ஆத்மார்த்தமான வாழ்த்துக்கள்**

**அழகானவர்:**

நான் சொல்வதை விட பல பெண்கள் சொல்ல கேட்டுள்ளேன்.

சின்ன ஊறணியைச் சேர்ந்த அன்பழகன் என்ற ஆளுமையை நான் பெரிய ஊறணியைச் சேர்ந்தவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதால் பெற்றோர் வாயிலாக சிறுவயதில் கேட்டறிந்துள்ளேன். பின்பு தமிழ், கலை இலக்கிய சமூக சேவைக்காக கதிரவனுடன் இணைந்த பொழுது அந்த அன்பான அழகான ஆளுமையுடன் பேசிப் பழகி பயணிக்கும் சந்தர்ப்பம் கிட்டியது.

**ஆளுமைமிக்கவர்:**

பல திறன்விருத்தி செயலமர்வுகளை நடாத்துபவர் என்பதற்கு மேலாக அவருடைய ஆளுமை ஆற்றலை கதிரவன் பட்டிமன்ற பேரவையின் பல மயில்கல்லான நிகழ்வுகளை நடாத்தி நிறைவேற்றியதை கண்கூடாக கண்டுள்ளேன். பேரவையின் ஔவை விழா நூறாவது பட்டிமன்றம் வட இலங்கைப் பயணம் தலை நகர்ப் பயணம் இந்தியப் பயணம் போன்ற குறிப்பிடத்தக்க பல வெற்றி நிகழ்வுகளை நடாத்த பெரும் பங்காற்றிய ஆளுமையாளர்.

**இன்புறுபவுர்:**

தான் மட்டும் இன்புற்றிருக்காது தன்னுடன் சேர்த்து இருப்பவருடனும் கூடி மகிழ்பவர். பல ஒன்றுகூடல்களை கதிரவன் மகிழ்வான நிகழ்வாக மாற்றுபவர்.

**ஈர்த்துவக்கும் அன்பன்:**

பொருள் படைத்தோர் ஈகை அவரின் பொருளளவு மட்டுமே" அறிஞரின் அறிவுக் கொடை வற்றாத மணற்கேணி". பெற்ற அறிவை பிறருக்கு வழங்க பின்னிக்காதவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உணர்வாளர்:**

தமிழ் உணர்வாளர் மட்டுமல்ல மேலாக மொழி மதம் கடந்து மனிதத்தை சிந்திக்க தூண்டுபவர்.

**ஊக்கி:**

நல்லது நடக்க நம்மவர் நல்லதை பெற உறுதுணை நின்று ஊக்கமளித்து பேசுபவர்.

**எழுத்தாளர்:**

தன் சிந்தனைகளை பேனா வாயிலூடாக உருக்கொடுத்து சீர்படுத்தும் கலையாளன்.

**ஏர் அவர்:**

மண்ணைப் பதப்படுத்த ஏர் கொண்டு உழ வேண்டும். ஆன்பு ஐயாவின் வார்த்தைகள் மனதைப் பண்படுத்தி நல்ல சிந்தனைகளை வளர வைக்கும்.

**ஐ அவர்:**

அழகு, தலைவன், குரு என பொருள்படும் அனைத்தும் அவருக்கு பொருந்தும்.

**ஒருங்கிணைப்பவர்:**

நல்லதை ஒருங்கிணைத்து வெளிக்கொணர்பவர். ஒழுக்கம் என்பது எவ்வளவு முக்கியமோ ஒழுங்கு என்பதும் ஒருவரின் வெற்றிக்கு வழுவகுக்கும். ஒரு நிகழ்வை மாத்திரமல்ல தன்னுடைய வாழ்க்கை தன்னுடைய முன்னேற்றம் என்பவற்றை முன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டியே ஒழுங்கமைத்து நடாத்துபவர். பெரிய; பணம் கல்வி, பின்புலம் இல்லாத குடும்பத்தில் பிறந்தாலும் வாழ்க்கையில் வெற்றியைக் கண்டவர்.

**ஓய்விலும் ஓயாதவர் :**

ஓய்வுநிலை அகவை அறுபதை தொட்டாலும் ஓயாத கலைத்தாகம் கொண்டு ஐம்பதிலும் கற்று சட்டமாணிப் பட்டம் பெற்றீர்.

**ஔடதம்:**

அவரின் பேச்சு மனக்குழப்பத்தில் உள்ளோருக்கு ஔடதம். வெற்றியையும் ஆளுமை விருத்தியையும் விரும்பும் மாணவர்களுக்கு ஔடதம் பட்டிமன்றப் பேரவையின் சிறப்பு மற்றும் திறன் காக்கும் ஔடதம் அவரின் ஆற்றல்.

**ஃ :**

தமிழுக்கு ஆயுத எழுத்து ஃ தமிழின் சிறப்பையும் தனித்துவத்தையும் காக்கும் ஆயுதம் அவரின் தமிழறிவு.

**அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாள்...**

➤ **மட்டுநகர் சிவ வரதகரன்**

**பொருளாளர், கதிரவன் பட்டிமன்றப் பேரவை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எந்தக் குறையுமின்றி
ஏற்றம்பெற வைத்தவர்...
சொந்த உறவுகளின்
சுமைகளைக் களைந்தவர்...
சந்தோசமாகவே
சாதனை புரிந்தவர்...
எந்தன் இதயத்தில்
என்றும் குடி கொள்பவர்...

அவரைப்பற்றிச் நானெழுத
ஆயுளே போதாது...
சிவன் யேசுநாதராக
சிந்தையிலே வாழ்பவர்
தவமிருந்தும் கிடையாத
தற்பகன் பிறந்தநாள்
அவனாலே எனது
ஆருயிர் மலர்ந்தநாள்..!

➤ **ரஞ்சினி அன்பழகன் குரூஸ்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புக்கு அறுபது
அகம் நிறைந்த
நிகழ்விற்கும்...

'அன்பு' வைரவிழா
அகம் தந்த
மலருக்கும்...

அன்போடு ஒன்றிணைந்த
அன்புள்ள உறவுகளுக்கும்...

கதிரவனின் நன்றி



**கவிஞர் அழகு தனு**
**செயலாளர்**
**கதிரவன் பட்டிமன்றப் பேரவை**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

60

அன்புக்கு அறுபது வைரவிழா மலர்

சிறப்படைய வாழ்த்துவதோடு

பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவிப்பதிலும்

அகம் மகிழ்கின்றோம்

# காந்தள் அச்சகம்

කාන්දළ් ප්‍රින්ටර්ස් * KAANTHAL PRINTERS

WWW.KAANTHAL.COM

Main road, Puthukkudiyiruppu-EP, Batticaloa. | ☎ 065 222 67 222, 0752221444, 0775500273

Digital & Offset

# Printing



- Book Printing
- Magazine Printing
- Invitation Cards
- Visiting Card
- Brochure
- Lettedhead
- Bill / Voucher
- CD / DVD Cover
- Flyer
- Poster
- Colour Print
- Photocopy

உங்கள் சிந்தையில் உள்ளதை வடிவமைத்து கச்சிதமாய் கையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம் காந்தள் அச்சகம்; ஈழத்து எழுத்தாளர்களுக்கு சிறப்பு விலையில் அவர்களது ஆக்கங்களை இந்திய தரத்தில் அச்சிட்டு வழங்குவதன் மூலம் ஈழத்து இலக்கிய பயணத்தில் தன்னையும் இணைத்துக் கொள்வதில் உவகை கொள்கிறோம். தொடர்புகளுக்கு: 0752221444



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org